# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.140/2022 | Date | : 25.08.2025 |
| Deposition of Witness for | : அ.சா.6 | Taluk | : |
| Name | : டாக்டர்.சுரேஷ் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.08.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிசெய்து வருகிறேன். கடந்த 16-07-2020 ம் தேதியன்று, காலை சுமார் 08.25 மணியளவில் நான் சங்ககிரி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, முருகேசன், வயது 42 என்பவரை இராஜேந்திரன் என்பவர் அழைத்து வந்தார். அவர் அவசர சிகிச்சை பிரிவில் ஆஜராகி தன்னை தனக்கு தெரிந்த மூன்று நபர்கள் சங்ககிரி எஸ்.கே நகரில் காலை சுமார் 08.00 மணியளவில் உருட்டு கட்டையால் தாக்கியதாக கூறினார்.

2) நான் அவரை பரிசோதித்து பார்த்தபோது அவருக்கு சுமார் 02 செ.மீ நீளமும், 1.5 செ.மீ அளவில் சிராய்பு காயம் வலது முட்டியில் இருந்தது. மேலும், அவர் தன்னுடைய வலது கால், இடது முன்கை ஆகிய இரண்டும் வலி இருப்பதாக கூறினார். நான் அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன்.

மேலும், அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று காயச்சான்று வழங்கினேன். (**விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Suresh